<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>

<u>அசல் வழக்கு எண். 64/2015</u>

PW1 – திரு. காளிமுத்து நாள். 14.02.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. எனது தகப்பனார் பெயர் பெரியய்யா என்றால் சரிதான். பெரியய்யாவின் தகப்பனார் பெயர் ராமசாமி என்றால் சரிதான். இராமசாமியின் உடன் பிறந்தவர்களில் மூத்தவர் பெயர் காளிமுத்து என்றும் இளையவர் பெயர் ஆதினமிளகி என்றால் சரிதான். மேற்படி காளிமுத்து வாரிசு இல்லாமல் இறந்து போய்விட்டார் என்றால் சரிதான்.

2. எனது தகப்பனாரும், ஆதினமிளகியின் மகள் பிச்சை என்கிற கருப்பாயி மற்றும் ஆதினமிளகியின் மகள் ரத்தினம் என்ற பெரியமறத்தியின் மகன் தங்கவேலு ஆகியோர்கள் அவர்களது பூர்விக சொத்துக்களை பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் மூலம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

3. மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் மூலம் பாகம் பிரிக்கப்பட்ட சொத்துக்களை இவ்வழக்கில் தாவா சொத்தான சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான். எனது தகப்பனார் பெரியய்யாவின் முதல் மனைவியின் பெயர் பெருமாத்தை என்றால் சரிதான். எனது தகப்பானருக்கும், அவரது முதல் மனைவி பெருமாத்தைக்கு புஷ்பம், காளிமுத்து ஆகிய நான் ஆகிய இருவரும்

வாரிசுகள் ஆவோம். மேற்படி புஷ்பம் என்பவர் இறந்து விட்டார், மேற்படி புஷ்பம் என்பவரின் கணவர் பால்ச்சாமி உயிருடன் உள்ளாரா என்றால் இருக்கிறார். மேற்படி பால்ச்சாமியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். பால்ச்சாமி மற்றும் புஷ்பத்தின் வாரிசுகளான இராமநாதன், செல்வி, பாண்டி ஆகியோர்களை 4 முதல் 6 பிரதிவாதிகளாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. இவ்வழக்கின் 4ம் பிரதிவாதி கடந்த 6 மாதங்களுக்கு முன்பு இறந்து விட்டார். மேலும் 4ம் பிரதிவாதிக்கு மனைவி மற்றும் குழந்தைகள் உள்ளனர். மேற்படி 4ம் பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான்.

5. உரிய தரப்பினர்களை இவ்வழக்கில் சேர்க்கப்படாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பிரித்து தரக்கோரி யாரிடம் எப்பொழுது கேட்டேன் என்றால் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரதிவாதிகளாகிய 2ம் பிரதிவாதியாகிய முத்துலெட்சுமி, 3ம் பிரதிவாதி தமிழ்ச்செல்வி, 3ம் பிரதிவாதி இந்திரா என்பவர்களிடம் 2015 நான்காம் மாதம் பாகம் பிரித்துத் தரக்கோரி கேட்டேன்.

6. மேற்படி பஞ்சாயத்தார்கள் யார் யார் என்றால் அரசூரைச் சேர்ந்த பிச்சகுட்டித் தேவர், சிறுகுடியைச் சேர்ந்த இராமநாதன் மற்றும் சிலர் இருந்தனர். மேற்படி பாகப்பிரிவினை பஞ்சாயத்தார் முன்னிலையில் கேட்ட விவரத்தை எனது பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. மேற்படி பாகப்பிரிவினை கோரிய விவரங்களை எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. எனது தாயார் பெருமாத்தை எப்பொழுது இறந்தார்கள் என்றால் இறந்து 20 வருடங்கள் ஆகிறது. எனது தகப்பனாரின் இரண்டாவது மனைவியின் பெயர் குஞ்சரம் அவர்களுக்கு பாலசுப்பிரமணியன் என்பவர் ஒரே வாரிசு. மேற்படி பாலகசுப்பிரமணியன் ஆறு மாத குழந்தையாக இருக்கும் போது அவரது தாயார் குஞ்சரம் இறந்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி பாலசுப்பிரமணியன் இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். அவருக்கு தற்பொழுது 68 வயது இருக்கும்.

9. மேற்படி குஞ்சரம் இறந்து சுமார் 67 வருடங்கள் ஆகிறது என்றால் சரிதான். எனது தாயார் பெருமாத்தை இறப்பதற்கு முன்பே மேற்படி குஞ்சரம் இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் 2வது பக்கத்தில் 6 வது வரியில் எனது தாயார் பெருமாத்தை இறந்துவிட்டார், அதன் பின் பெரியய்யா அம்பலம் குஞ்சரம் என்பவரை திருமணம் செய்து 2ம் பிரதிவாதி பாலசுப்பிரமணியன் பிறந்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

10. எனது தகப்பனார் பெருமாத்தை மற்றும் குஞ்சரம் ஆகியோர்களை திருமணம் செய்ததற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி திருமணங்கள் நாட்டு முறைப்படி செய்தது. எனது தகப்பனார் காலம் சென்ற 1ம் பிரதிவாதியான பூமயில் என்கிற காளியம்மாளை திருமணம் செய்ததற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை அதைப்பற்றி எனக்கு தெரியாது.

11. மேற்படி 1ம் பிரதிவாதி எனது தகப்பனாரின் 3வது மனைவி என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெரியய்யாவிற்கும், 1ம் பிரதிவாதிக்கும் 2,3 மற்றும் 7 பிரதிவாதிகள் பிறந்தார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் எனது தாயார் பெருமாத்தை, அவரது 2வது மனைவி குஞ்சரத்தையும் எவ்வாறு நாட்டு வழக்குப்படி திருமணம் செய்து கொண்டாரோ அவ்வாறுதான் 1ம் பிரதிவாதியை 3வது மனைவியாக திருமணம் செய்து கொண்டார் என்றால் அதைப்பற்றி

எனக்கு தெரியாது.

12. எனது நிருபண வாக்குமூலத்தில் எனது தகப்பனாருக்கு 1வது பிரதிவாதி சட்டப்படியான மனைவி இல்லை என எதற்காக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனது தகப்பனார் இரண்டு திருமணங்கள் செய்திருந்து மனைவிகள் உயிருடன் இருந்த நிலையில், 1ம் பிரதிவாதி எனது தகப்பானருக்கு சட்டப்படியான மனைவி ஆக மாட்டார் அதனால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன்.

13. எனது தகப்பனார் எனது தாயார் பெருமாத்தை உயிருடன் இருக்கும் போதே இரண்டாவது மனைவியாக குஞ்சரத்தை திருமணம் செய்து கொண்டதால் அவரும் சட்டப்படியான மனைவி ஆகமாட்டார் என்றால் அவர் சட்டப்படியான மனைவி ஆவார், காரணம் எனது தாயார் உடல்நிலை சரியில்லாத நிலையில் இரண்டாவது மனைவியை திருமணம் செய்ய சம்மதம் தெரிவித்ததனால்.

14. மேற்படி எனது தாயாருக்கு என்ன உடல்நிலை சரியில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு நான்குமால் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் எவ்வளவு மதிப்புடையது என்று எனக்கு தெரியாது.

15. பிராதில் தாவா சொத்துக்களுக்கான மதிப்பினை வழக்கறிஞருக்கு யார் கூறியது என்றால் அன்றைய மதிப்பு படி நான் தான் கூறினேன். மேற்படி பிராதில் கூறியபடி நஞ்சை நிலத்திற்கு 1 செண்டுக்கு எவ்வளவு மதிப்பு என்றால் எனக்கு ஞாபகமில்லை.

16. பொதுவாக நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்களை 1 செண்டுக்கு இவ்வளவு மதிப்பு என நிர்ணயம் செய்து விற்பார்கள் என்றால் சரிதான். தாவா 1வது இலக்க சொத்தான சர்வே எண் 191/2பி 31 செண்ட் மற்றும் தாவா 2வது இலக்க சொத்தான சர்வே எண் 191/3 41 செண்ட் என்றால் சரிதான்.

17. பிராதில் மேற்படி 1 மற்றும் 2 இலக்க சொத்துக்களுக்கு தலா ஆயிரம் வீதமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 40 இலக்க சொத்துக்களுக்கும் விஸ்தீரணங்கள் கூடக் குறைய இருந்தும், மதிப்பீட்டை சரியாக மதிப்பிடாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

18. மேற்படி தாவா சொத்துக்களை சரியாக மதிப்பிடாத காரணத்தால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை தவிர எங்கள் குடும்ப சொத்து வேறு எதுவும் இல்லை. அவ்வாறு தாவா சொத்துக்களை எங்கள் குடும்ப சொத்துக்கள் இருந்தால் எனக்கு அதில் பாகம் தேவையில்லை என்றால் எங்களுக்கு வேறு சொத்துக்கள் இல்லை அவ்வாறு இருந்தால் அதில் எனக்கு பாகம் தேவையில்லை.

19. 06.03.1979 ல் எனது தகப்பனார் பெரியய்யா அம்பலமும், பிச்சை என்ற கருப்பாயி, இரத்தினம் என்ற பெரியமறத்தியின் மகன் தங்கவேலு ஆகியோர்கள் யாருடைய சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் எனது தகப்பனாரின் பெரியப்பா காளிமுத்து வாரிசுகள் இல்லாமல் இறந்ததால் அவரது பாக சொத்துக்களை பிரித்துக் கொண்டார்கள்.

20. மேற்படி பாகப்பிரிவினை செய்து கொண்டபடியால், எனது தகப்பனாருக்கு தரப்பட்ட பாகமானது தனித்து பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றால் சரியல்ல அது எங்களது பூர்விக சொத்து. மேற்படி எனது தகப்பனாருக்கு பாகப்பிரிவினையில் பெறப்பட்ட சொத்தையும் இவ்வழக்கில் பாகப்பிரிவினைக்காக சேர்க்கப்பட்டுள்ளது.

21. எனது தகப்பனார் அவருக்கு கிடைக்கப் பெற்ற பாகப்பிரிவினையை 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு 23.01.1981 ம் தேதி பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அவ்வாறு உயில் எதுவும்

எழுதப்படவில்லை.

22. மேற்படி உயில் எழுதப்பட்ட விவரத்தை நாங்கள் எப்பொழுது தெரிந்து கொண்டோம் என்றால் மேலே கூறியபடி பஞ்சாயத்தில் பாகப்பிரிவினை கோரும் போது 2 மற்றும் 3 பிரதிவாதிகள் கூறியதால் தெரிந்து கொண்டேன். மேற்படி உயில் எழுதப்பட்டிருந்தாலும் அது மோசடியானது என எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உயிலை நான் இதுவரையில் பார்த்ததில்லை என்றாலும் அதில் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

23. மேற்படி பஞ்சாயத்து பேசிய சிறுகுடி இராமநாதன் எனக்கு அத்தை மகன் ஆவார். மேற்படி உயிலை பற்றி சிறுகுடி இராமநாதன் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. மேற்படி உயில் எழுதிய சில நாட்களிலேயே சிறுகுடி இராமநாதன் அந்த விவரத்தை என்னிடம் கூறிவிட்டார் என்றும் மேற்படி உயிலில் அவர் சாட்சி கையொப்பம் செய்தார் என்ற விவரத்தையும் என்னிடம் கூறி விட்டார் என்றால் என்னிடம் அவர் உயில் தொடர்பாக எதுவும் கூறவில்லை.

24. சிறுகுடி இராமநாதன் அத்தை மகன் என்ற காரணத்தாலும், அவரை உயிலின் சாட்சியாக விசாரிக்க முடியாமல் செய்ய முடியும் என்பதாலும் பதிவு செய்யப்பட்ட உயிலை இல்லை என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

25. தாவா சொத்துக்களில் எந்தெந்த சொத்துக்கள் எனது தகப்பனார் பாகப்பிரிவினையின் படி கிடைக்கப் பெற்றது என்றால் வருவாய் ஆவணங்களை பார்த்தால் தான் கூறமுடியும். வருவாய் ஆவணங்களில் எனது தகப்பனாருக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைத்த சொத்துக்களுக்கும், அவரது பூர்விக சொத்துக்களுக்கும் ஒரே பட்டாவில் தான் உள்ளது என்றால் சரிதான், பட்டா

எண் 629 ஆகும். அதற்கான 10(1) தான் வா.சா.ஆ.1 என்றால் சரிதான்.

26. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி எனது தகப்பனாருக்கு எந்தெந்த சொத்துக்கள் பாகப்பிரிவினை மூலம் பாத்தியப்பட்டது என்று என்னால் கூற முடியுமா என்றால் கூற முடியாது. 1 முதல் 3 பிரதிவாதிகளின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. நான் சாட்சி சொல்ல வரும்வரை மேற்படி எதிர்வழக்குரையை எனது வழக்கறிஞர் படித்து காட்டவில்லையா என்றால் ஒருமுறை படித்து காட்டினார் அது எனக்கு ஞாபகமில்லை.

27. 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் எனது தகப்பனாருக்கு எந்தெந்த சொத்து பாத்தியப்பட்டது என்று தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்தும், அதைப்பற்றி இதுநாள் வரை எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களில் 14 இலக்க சொத்துக்களை தவிர மற்ற சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப் பெற்ற தனிப்பட்ட சொத்துக்கள் என்றும் அவ்வாறு தனித்த பாத்திய சொத்துக்களை 2,3 பிரதிவாதிகளுக்கு எனது தகப்பனார் உயில் எழுதி வைத்துவிட்டதால் அந்த சொத்துக்களுக்கு பாகப்பிரிவினை கோர முடியாது என்றால் சரியல்ல.

28. எனது தகப்பனார் எனது தாயாருடன் சேர்ந்து வாழாமல் இருந்தார்கள் என்றால் சரியல்ல. எனது ஊரில் எனது தகப்பனாருக்கு ஓட்டு வீடு இருந்ததா என்றால் ஏற்கனவே இருந்து தற்போது இடிந்து விட்டது. மேற்படி ஓட்டு வீட்டை கிழக்கு பக்கம் காளிமுத்துவும், நானும் மேற்கு பக்கம் பாலசுப்பிரமணியமும் பிரித்துக் கொண்டோம் என்றால் இல்லை அதன் எதிரே உள்ள ஓட்டு கொட்டகையை தான் அவ்வாறு பிரித்து குடியிருந்து வந்தோம்.

29. அவ்வாறு பிரித்து குடியிருந்தது எனக்கும், 2ம் வாதிக்கும் திருமணமான பிறகு தான் என்றால் சரிதான். அப்பொழுது எங்களுக்கு விவசாயத்தை தவிர வேறு வருமானம் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் எனக்கும், 2ம் வாதிக்கும் விவசாயம் செய்து கொள்ள நஞ்சை, புஞ்சை நிலங்களை பிரித்துக் கொடுத்தார் என்றால் சரிதான்.

30. எனது சகோதரி புஷ்பம் எப்பொழுது இறந்து போனார்கள் என்றால் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர். இறக்கும்பொழுது எனது சகோதரி புஷ்பத்திற்கு சுமார் 46, 47 வயது இருக்கும். எனக்கும் எனது சகோதரிக்கும் எவ்வளவு வயது வித்தியாசம் என்றால் சுமார் 4, 5 வருடங்கள் இருக்கும். எனது சகோதரியின் இறப்பு சான்றிதழைப் பார்த்தால் வயது எவ்வளவு என்று தெரியவரும் என்றால் சான்றிதழ் வாங்கினார்களா வாங்கவில்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது அவ்வாறு பார்த்தால் தெரிய வரும். எனது தகப்பனார் பெரியய்யாவின் 3வது மனைவியான 1ம் பிரதிவாதியை திருமணம் செய்த பிறகு தான் நான் பிறந்தேன் என்றால் திருமணம் செய்வதற்கு முன்னரே நான் பிறந்து விட்டேன். எனது தகப்பானருக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப் பெற்ற சொத்துக்கள் 21 இலக்க சொத்துக்கள் என்றால் சரியல்ல, மொத்தம் வீட்டுடன் சேர்த்து 40 இலக்க சொத்துக்கள் ஆகும். மேற்படி எனது தகப்பானருக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப் பெற்ற 40இலக்க சொத்துக்களைத்தான் இவ்வழக்கில் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

31. எனது தகப்பனார் அவரது பெயரில் சொத்துக்கள் எதுவும் கிரையம் வாங்கவில்லை. எனது தகப்பனார் பூர்விக சொத்துக்களில் ஒருசில சொத்துக்களை விற்பனை செய்துள்ளார். எனது தகப்பனார் அவரது பெயரில் சொத்துக்கள் ஏதேனும் கிரையம் வாங்கி அதை யாருக்கேனும் ஆவணங்கள் எழுதிக் கொடுத்திருந்தால் அந்த சொத்துக்களில் பாகம் வேண்டும் என்றால் எனக்கு பாகம் வேண்டும். ஏனென்றால் அவ்வாறு கிரையம் வாங்கப்பட்ட சொத்துக்கள் கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது.

32. தாவா சொத்துக்களில் எந்தெந்த சொத்துக்கள் எனது தகப்பனார் பெயரில்

கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது என்றால் மூன்று இடங்கள் வாங்கப்பட்டது அதன் சர்வே நம்பர் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி வாங்கிய மூன்று இடங்களின் விஸ்தீரணம் 30,37, 35 மற்றும் 1 ஏக்கர் உள்ள இடங்கள் ஆகும். மேற்கண்டவாறு எனது தகப்பனார் பெயரில் கூட்டுக்குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கப்பெற்ற சொத்துக்கள் என எனது பிராதிலும், நிருபண வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை.

33. எங்களுக்கு தாவா சொத்துக்கள் பற்றி முழுமையான விவரங்கள் தெரிந்தும் அவற்றை மறைத்து பொய்யான விவரங்களை கூறி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் நீதிமன்றத்திற்கு நான் சுத்தமான கரங்களுடன் அணுகாததால், தாவா வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால் சரியல்ல.

34. எனது தகப்பனார் அவருக்கு தனித்து பாத்தியமான பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப் பெற்ற சொத்துக்களையும், தனித்து கிரையம் பெற்ற சொத்துக்களையும் தான் 2,3 பிரதிவாதிகளுக்கு 23.01.1981 ல் பதிவு செய்யப்பட்ட உயில் மூலம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

35. எனது தகப்பனார் 2015 ம் வருடம் இறந்தார். எனது தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் சொத்துக்களை பாகப்பிரிவினை செய்யக் கோரி கேட்டோமா என்றால் கேட்கவில்லை. நான் பிறந்ததில் இருந்து எனது சொந்த கிராமத்தில் தான் வாழ்ந்து வருகிறேன். ஏந்தல் கிராமம் என்பது எனது சகோதரி புஷ்பம் திருமணமாகி சென்ற ஊர் என்றால் சரிதான். நான் ஏந்தல் கிராமத்தில் எத்தனை வருடம் இருந்தேன் என்றால் நான் அங்கு இருந்ததில்லை.

36. எனது தகப்பனார் குஞ்சரம் என்பவரை திருமணம் செய்த பிறகு நானும், எனது தயாரும் ஏந்தல் கிராமத்திற்கு சென்றுவிட்டோம் எனவும், எனது தகப்பனார் இறந்த பிறகு வேளாவயல் கிராமத்திற்கு திரும்பி வந்தோம் என்றால் சரியல்ல. நானும், 2 ம் வாதியும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு சொத்துக்களை கொடுக்காமல் அபகரிக்க கூடும் என்பதாலும், 2, 3 பிரதிவாதிகளின் மேல் உள்ள பிரியத்தாலும் அவர்களுக்கு ஒரு ஆதரவு

எழுதி வைக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் தான் எனது தகப்பனார் உயில் 2,3 பிரதிவாதிகளுக்கு உயில் எழுதி வைத்திருந்தார் என்றால் சரியல்ல.

37. உயில் எழுதி வைத்த காலமான 1981 ம் ஆண்டுக்கு முன்னரே 7 ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகி விட்டது என்றால் உயில் எழுதி வைத்த காலம் 1981 என்ற விவரம் எனக்கு தெரியாது, மேலும் 7 ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆனது எனக்கு தெரியும் எப்பொழுது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களில் கண்டுள்ள பூர்விக சொத்துக்களில் 2, 3 மற்றும் 7 பிரதிவாதிகளுக்கு பாகம் உள்ளதா என்றால் 3 ல் 1 பங்கு அவர்களுக்கு கொடுப்பதாக ஒத்துக் கொண்டோம், அவர்கள் ஒத்து வரவில்லை. மேற்படி நபர்களுக்கு கொடுப்பதாக சொல்லும் 3 ல் 1 பங்கு தாரத்தின் அடிப்படையில் கூறுகிறேனா அல்லது குழந்தைகளின் அடிப்படையில் கூறுகிறேனா என்றால் தாரத்தின் அடிப்படையில் தான் 3 ல் 1 பங்கு ஒப்புக் கொண்டுள்ளோம். சட்டப்படி குழந்தைகளின் படிதான் பாகம் பிரிக்க முடியுமே தவிர, தாரத்தின் அடிப்படையில் பாகப்பிரிவினை கேட்க முடியாது என்றால் சரியல்ல.

38. நாங்கள் தாவா பிராதில் கோரியுள்ள 3 ல் 2 பாகப் பரிகாரம் சட்டப்படி கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. மேலும் பிராதில் கூறிய எந்தப் பரிகாரமும் எனக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை கோரி ஒருமுறை மட்டுமே பஞ்சாயத்தை நாடினேன் என்றால் சரிதான். மேற்படி பஞ்சாயத்தில் பாகப்பிரிவினை கோரியதைத் தவிர வேறு எந்தவகையிலும் பாகப்பிரிவினை கோரவில்லை என்றால் சரிதான்.

39. எனது பிராதில் பஞ்சாயத்து மூலம் பாகம் கோரப்பட்டது பற்றி கூறவில்லை என்றும் பாகம் செய்து கொள்ள முயன்றதாக இரண்டு தேதிகளை வியாஜ்ஜிய மூலத்தில் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வியாஜ்ஜிய மூலம் சரியாக கோரததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யக் கூடியது என்றால் சரியல்ல.

40. நான் மேற்படி உயிலை பார்க்காததால் அது மோசடியான உயில் என கூற முடியாது என்றால் அது மோசடியாகத்தான் தயாரிக்கப்பட்டிருக்க கூடும். பொதுவாக ஒரு ஆவணத்தை பார்க்காமலேயே அது எந்தவகையான ஆவணம் அது எவ்வாறு

தயாரிக்கப்பட்டது என்ற விவரங்களை கூற முடியாது என்றால் சரிதான். பொதுவாக ஆவணத்தை தயாரித்தவர்கள் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்கள் ஒரு நபரிடம் தெரிவிக்காத வரை அந்த ஆவணம் உண்மையான ஆவணமா அல்லது மோசடியான ஆவணமா என்று கூற முடியாது என்றால் சரிதான். அதனடிப்படையில் உயில் ஆவணத்தை மோசடியான ஆவணம் என கூறுவதற்கு எனக்கு உரிமையில்லை என்று சொன்னால் சரியல்ல.

41. தாவா சொத்துக்களில் 14 இலக்க சொத்துக்களை தவிர மற்ற சொத்துக்களை 2, 3 பிரதிவாதிகளுக்கு எனது தகப்பனார் எழுதி கொடுத்தபடியால் அதில் பாகம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. உயில் ஆவணம் மூலமாக 2,3 பிரதிவாதிகளுக்கு 38 இலக்க சொத்துக்களை எழுதி வைத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. உயிலில் கண்ட மொத்த சொத்துக்களையும் இவ்வழக்கில் பாகப்பிரிவினைக்கு சேர்க்காததால் தள்ளுபடி செய்யக் கூடியது என்றால் சரியல்ல.